**கவனிக்க.-** *2019.05.31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2127 - 2019 ජූනි මස 07 වැනි සිකුරාදා - 2019.06.07**

*2127 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1074 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1099 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1073 - 81530 - 5403(2019/06)

# பதவிகள் - வெற்றிடம்

திஹகொட பிரதேச சபை

**தென் மாகாண அரசாங்க சேவையில் (உள்ளூராட்சி) வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு**

| தொ. இல. | பதவிப் பெயர் | சேவை வகை | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | இணைத்துக் கொள்ளப்படுவதற்கான குறைந்தபட்ச கல்வித் தகைமைகள், அனுபவம், வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01. | மினியல் தொழிலாளர் | தரம் III முதன்மைக் கைவினை | 01 | பொ.நி.சு. 3/2016 இன் படி PL2 -2016 ரூபா 25,250.00 -10 x 270-10 x 300-10 x 330 -12 x 350- ரூபா 38,450.00 | க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>குறிப்பிட்ட பதவிகளுக்கு உரிய முறையில் மூன்றாம் நிலை அல்லது தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறான தேசிய தொழில் திறமை (N.V.Q.) குறைந்த பட்சம் இரண்டாம் தர திறன் பெற்றிருத்தல்.<br><br>குறிப்பிட்ட களத்தில் அனுபவம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும். |

02. **தேவையான வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில்மாகாண அரசாங்க சேவையில் கடமை புரியும்விண்ணப்பதாரருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல அத்துடன் அவர்கள் குறித்த திணைக்கள தலைவர் மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் 03 வருடங்கள் மாத்தறை மாவட்டத்தில் நிரந்தரமாக குடியிருப்பவராக இருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரர் நன்னடத்தையும், பதவியினை சீராகச் செய்வதற்கான நல்ல தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(v) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றம் சுமத்தப்பட்டவராக இருத்தல் கூடாது.

(vi) அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

(vii) விண்ணப்பதாரர் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் தினத்தன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. அது எவ்வாறாயினும் பதவிக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

(ii) சேவையில் இணைத்துக் கொள்ளப்படுபவர் விதவைகள், அநாதைகள்/தபுதாரர், அநாதைகள் பொறுப்பு நிதியத்திற்கு பங்குதாரராக நிதியைச் செலுத்த வேண்டும்.

(iii) சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்கள் 03 ஆண்டுக்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்களாவர்.

(iv) சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்கள் அரச மொழிக் கொள்கையில் இணக்கப்பாடுடையவராய் இருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு பதவிகளுக்குமான சம்பள பரிமாணம் 2016.01.01 ஆந் திகதி முதல் கொடுப்பனவுகள் வழங்கப்படுவது அரசாங்க சுற்று நிருபம் 03/2016 இன் II ஆம் அட்டவணையின் பிரகாரமாகும். அந்த சம்பள பரிமாணமானது 2020.01.01 ஆந் திகதி முதல் சம்பூரணமாக நடைமுறைப்படுத்தப்படும்.

(vi) திஹகொட பிரதேச சபையில் தற்போதைக்கு சேவையிலிருக்கும் தற்காலிக/சமயாசமைய/ஒப்பந்த அடிப்படை/பதிவு செய்தல் முறைகளின் கீழ் சேவைகளிலிருக்கும் ஊழியர்களுக்கு அதிக கவனம் செலுத்தப்படும்.

(vii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் சட்ட திட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் அரசியலமைப்புக்கும் தாபன விதிக் கோவை, நிதிப் பிரமாணங்களுக்கும் தென் மாகாண சபை ஆளுநரின் கட்டளைகளுக்கும்

திஹகொட பிரதேச சபை மூலம் இடைக்கிடை வெளியிடப்படும் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் சேவையாற்ற கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(viii) பதவிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்படும் ஊழியர்கள் தென் மாகாண சபை கௌரவ ஆளுநர் மூலம் 2013.04.16 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 239 ஆம் இலக்க தென் மாகாண அரசாங்க சேவையில் நிறுவனப்படுத்தப்பட்ட கனிஷ்ட சேவையாளர் சேவையின் முதன்மைக் கைவினையல்லாத சேவை வகைக்கு உரித்தான ஆட்சேர்ப்பு விதிமுறைகள் கட்டளைகளுக்கும் அத்தோடு இடைக்கிடை வழங்கப்படும் சட்டங்கள், திருத்தங்களுக்கு ஏற்பவும் சேவையாற்ற கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

04. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இவ்வறிவித்தலில் இருக்கும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்தைப் போல் A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரமொன்றின் மூலம் 2019.06.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு “தலைவர், திஹகொட பிரதேச சபை, திஹகொட” என்ற முகவரிக்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் இணைத்து பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் உள்ளிட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். குறிப்பிடப்பட்ட அறிவுரைகளுக்கு மாற்றமாக பூரணப்படுத்தப்படாத தெளிவற்றதும், குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (தற்போதைக்கு அரசாங்க சேவையில் மாகாண அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும்.)

05. **விண்ணப்பத்துடன் அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள் :**

1. பிறப்புச் சான்றிதழ்;
2. தேசிய ஆள் அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி;
3. கல்விச்சான்றிதழ்/பாடசாலை விடுகைச் சான்றிதழ்;
4. பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிட உறுதிச்சான்றிதழ் (06 மாத காலத்திற்குள் பெறப்பட்டது);
5. குற்றமிழைத்தல் தொடர்பாக இதுவரையில் நீதிமன்றமொன்றில் குற்றவாளியென நிரூபிக்கப்படாதவராக அல்லது அவ்வாறான குற்றமொன்று தொடர்பாக தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவரல்ல என்பதை உறுதிப்படுத்தும் பொலிஸ் சான்றிதழ்;
6. தொழில்சார் தொழில் அனுபவம் தொடர்பான சான்றிதழ் (இருந்தால் மாத்திரம்) ;
7. சமீபத்தில் பெற்றுக் கொண்ட நன்னடத்தை சான்றிதழ் இரண்டு;

6. விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது ஆட்சேர்ப்பினைத் தாமதப்படுத்தல் அல்லது மாற்றங்கள் செய்தல் அல்லது அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தங்களை மேற்கொள்ளுதல் போன்ற அதிகாரம் அனைத்தும் திஹகொட பிரதேச சபை தவிசாளரைச் சார்ந்தது.

இவ்வறித்தலில் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பில் பொருள் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியிலான பொருளை முதன்மைப்படுத்தல் வேண்டும்.

இவ்வாட் சேர்ப்பு தொடர்பிலான விதி முறைகள் பகுக்கப்படாத அனைத்து காரணங்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானம் திஹகொட பிரதேசசபைத் தவிசாளரைச் சார்ந்தது.

லக்ஷமன் நிர்மால் சமரசிங்க,
தவிசாளர்,
திஹகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திஹகொட ,
2019, மே 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திஹகொட பிரதேச சபை**

............................................................ பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................................................................

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : ..........................................................................................

2. நிரந்தர முகவரி : ..........................................................................................................

3. நிரந்தர குடியிருப்பு மாவட்டம் : ..........................................................................................

4. நிரந்தர குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு :

5. பிறந்த திகதி : ஆண்டு: .............................. மாதம் : ........................... திகதி : ..............................

6. விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு வயது (2019.06.21 ஆந் திகதி)
வருடங்கள் : .................. மாதங்கள் : ............... நாட்கள்:......................

7. பால் : (ஆண்/பெண்) : ...............................................................................................

8. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

9. தொலைபேசி இலக்கம் : ............................................................................................

10. விவாகமானவர்/விவாகமாகாதவர் : ...........................................................................

11. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின், பரம்பரையாகவா ? பதிவு முறையிலா ? என்பது பற்றி :
..............................................................................................................

12. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :

12.1 சித்தியடைந்த ஆண்டு /தரம் : ........................................................

12.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை :

(i) ஆண்டு : ............................. மாதம் : .............................

(ii) சுட்டெண் : ...........................

(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

12.3 க.பொ.த. (உ. த.) பரீட்சை :

(i) ஆண்டு : ............................. மாதம் : .............................

(ii) சுட்டெண் : ..........................

(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

13. தொழில்சார் அல்லது சேவை அனுபவங்கள் பற்றிய தகைமைகள் : (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

14. நீர் தற்போது அரசாங்க சேவையில் இருப்பவராயின்:

(i) தற்போது வகிக்கும் பதவி : ...........................................................

(ii) தொழில் புரியும் இடம்: ...........................................................

(iii) நியமனத் திகதியும் தன்மையும் : ...........................................................

15. நீர் எப்போதாவது குற்றங்கள் இழைத்து நீதி மன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ?
அவ்வாறாயின், விபரம் : ...................................................................................................

16. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என் மூலம் கொடுக்கப்பட்ட தகவல்கள் எனது புத்திக்கும் அறிவுக்கும் எட்டிய வகையில் உண்மையானவை எனவும், பிழைகளற்றவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் அடங்கப்பட்டுள்ள விடயங்களில் ஏதேனும் பிழையானவை அல்லது உண்மைக்குப் புறம்பானதென பதவிக்கு தேர்ந்தெடுக்க முன்னர் வெளிப்படுமாயின் நான் தகுதியற்றவனாக ஆகி விடுவேனென்றும், பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவ்வாறான விடயங்கள் வெளிக்கொணரப்படுமிடத்து எந்த நஷ்ட ஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படவும் கடப்பாடுடையவனாவேன் என்பதை நான் அறிவேன்.

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

06-53

**பன்னல பிரதேச சபை**

வட மேல் மாகாண அரசாங்க சேவையின் கீழ் பன்னல பிரதேச சபையில் பின்வரும் பதவிகள் மற்றும் ஆரம்ப தர வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளையுடைய பன்னல பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தின் நிரந்தர குடியிருப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பன்னல பிரதேச சபையில் எற்கனவே சேவையாற்றுவதற்கான தகுதிகாண், பதில், தற்காலிக மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.

| பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| திறமை சாராத தரம் III சுகாதார ஊழியர் | 02 | பொ. நி. சு. 3/2016 இன் கீழ் PL-1 சம்பள குறியீடு முதல் படிநிலை ஆரம்ப சம்பளமாகக் கொள்ளப்படும். ரூபா 24,250.00-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410.00 | அரசாங்க அங்கீகாரம் பெற்ற பாடசாலை ஒன்றில் தரம் 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| திறமை சாராத தரம் III வேலைதள ஊழியர் | 04 | பொ. நி. சு. 3/2016 இன் கீழ் PL-1 சம்பள குறியீடு முதல் படிநிலை ஆரம்ப சம்பள மாகக் கொள்ளப்படும் ரூபா 24,250.00-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410.00. | தெரிவுப் பாடங்கள் நீங்கலாக க. பொ. த. (சா./த.) இல் இரு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். |
| திறமை சாராத தரம் III பாதுகாவலர் | 02 | பொ. நி. சு. 3/2016 இன் கீழ் PL-1 சம்பள குறியீட்டின் முதல் படிநிலை ஆரம்ப சம்பளமாகக் கொள்ளப்படும் ரூபா 24,250.00-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410.00 | தெரிவுப் பாடங்கள் நீங்கலாக க. பொ. த. (சா./த.) இல் இரண்டு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். |
| திறமை சாராத தரம் III வாசிகசாலை உதவியாளர் | 03 | பொ. நி. சு. 3/2016 இன் கீழ் PL-1 சம்பள குறியீட்டின் முதல் படிநிலை ஆரம்ப சம்பளமாகக் கொள்ளப்படும் ரூபா 24,250.00-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410.00 | தெரிவுப் பாடங்கள் நீங்கலாக க. பொ. த. (சா./த.) இல் இரண்டு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். கா. பொ. த.(உ./த.) சித்தி அடைந்திருத்தல், வாசிகசாலை விஞ்ஞான பயிற்சி நெறி பூர்த்தி செய்திருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும். |
| அரை நிபுணத்துவம் தரம் III மின் வினைஞர் | 01 | பொ. நி. சு. 3/2016 இன் கீழ் PL-2 சம்பள குறியீட்டின் முதல் படிநிலை ஆரம்ப சம்பளமாகக் கொள்ளப்படும் ரூபா 25,250.00 -10X270-10X300-12X330-ரூபா 38,450.00 | வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தெரிவுப் பாடங்கள் நீங்கலாக க. பொ. த. (சா./த.) இல் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் தரம் 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| அரை நிபுணத்துவம் தரம் III தகனசாலை இயக்குபவர் | 01 | பொ. நி. சு. 3/2016 இன் கீழ் PL-2 சம்பள குறியீட்டின் முதல் படிநிலை ஆரம்ப சம்பளமாகக் கொள்ளப்படும் ரூபா 25,250.00-10X270-10X300-12X330-ரூபா 38,450.00 | வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தெரிவுப் பாடங்கள் நீங்கலாக க. பொ. த. (சா./த.) இல் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் தரம் 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**02. அரை நிபுணத்துவ தரம் III இல் பணிக்கமர்த்த தேவைப்படும் திறமைகளும்/தேர்ச்சிகளும் :**

- மின் வினைஞர்

(i). அரசாங்க அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற் பயிற்சி நிறுவனம் அல்லது தொழிநுட்ப மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றில் மின் வினைஞர் பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல்;

(ii) திணைக்கள ஊழியர்களுக்கு - மின் வினைஞர்களுக்கான சிறு தொழில் முயற்சி திணைக்கள இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது தொழிநுட்பக் கல்லூரி ஒன்றிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறையில் 2 வருட தொழில் அனுபவம் (அனுபவச் சான்றிதழ் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

**03. தேவைப்படும் ஏனைய தகுதிகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பத் திகதியன்று வயது 18 இற்கு குறைவாகவோ அல்லது 45 வயதிற்கு அதிகமாகவோ இருத்தல் கூடாது;

(iii) பன்னல பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளரினால் அல்லது தேர்தல் பதிவேட்டின் ஊடாக வதிவிடம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்);

(iv) விண்ணப்பதாரர் ஆரோக்கியமாக இருப்பதோடு நன்னடத்தை உள்ளவரகவும் இருத்தல் வேண்டும்;

(v) குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் எந்த நீதிமன்றத்திலும் குற்றம் சாட்டப்படாதவராக இருத்தல் ஆகாது;

(vi) சாரதிப் பதவிக்கு ஆண் விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.

**04. ஆட்சேர்ப்பு முறை :**

பதவியின் தன்மைக்கேற்ப எழுத்துப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை/வாய்மொழிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஊடாக தகுதியான விண்ணப்பதாரர்களில் இருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**05. சேவை மற்றும் தொழில் நிபந்தனைகள்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியம் பெறத்தக்கது;

(ii) நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டது;

(iii) ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பன்னல பிரதேச சபையால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான சட்டங்களின் விதிகளுக்கும், வட மேல் மாகாண பொதுச் சேவை நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும், நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் தாபனக விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும் ஏற்ப வேலை செய்ய உடன்படல் வேண்டும்.

**06. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :**

(i) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2019.07.08 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், பன்னல பிரதேச சபை, பன்னல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்;

(ii) கடித உறையின் மேல் மூலையில் இடது பக்கம் ............பதவிக்கான என்று எழுதி அனுப்பப்படல் வேண்டும்;

(iii) பின்வரும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்.

(a) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்;

(b) கல்விச் சான்றிதழ்கள்;

(c) பாடசாலை விடுகைச் சான்றிதழ்;

(d) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்);

(e) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் இரண்டு;
(f) அனுவச் சான்றிதழ்.

இந்த விண்ணப்பம் கோரப்படும் போது அல்லது அதன் பிறகு ஆட்சேர்ப்பை பிற்போடுதல் அல்லது இந்த அறிவித்தலை மாற்றுதல், இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் முழு அதிகாரமும் பன்னல பிரதேச சபை செயலாளருக்குரியது.

கே. ஆர். பீ. ஜீ. ஆர். கருணாநாயக்க,
செயலாளர்,
பிரதேச சபை,
பன்னல.

பன்னல பிரதேச சபை அலுவலகம்,
2019, மே 22.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

பன்னல பிரதேச சபை ........................................................ பதவி

01. முதல் எழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................

02. முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : ...............................................................................

03. நிரந்தர முகவரி : ........................................................................................................

04. கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் : ...................................... ...........................................

05. பிரதேச செயலகம் : ..................................... ....................................................................

06. மாவட்டம் : ....................................................................................................................

07. பிறந்த திகதி : ஆண்டு : .................. மாதம்: ..................... திகதி: .....................

08. விண்ணப்பப முடிவுத் திகதிக்கு வயது: வருடங்கள் : ......... மாதங்கள் : ............... நாட்கள்: ............

09. பால் (ஆண்/பெண்) : .........................................................................................................

10. திருமண நிலை : .................................................................................................................

11. நீங்கள் இலங்கைப் பிரசையா : (பிறப்பால் /பதிவால்) ..............................................................................

12. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ...........................................................................................

13. கல்வித் தகைமைகள் :
பரீட்சையின் பெயர் : ..........................................

வருடம் : ..................... சுட்டிலக்கம் : .....................

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |

*தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் :*

*வேலை அனுபவம் :*

*இந்த பிரதேச சபையில் தற்போது பதில்/சாதாரண வேலை செய்பவராயின், சேவைக் காலம் மற்றும் தகவல்கள். வேலைக்கமர்த்தல் நிலை (நிரந்தரம்/சாதாரண/தற்காலிக/பதில்/கூலி அடிப்படையில்)*

.............................................................................................................................................

.............................................................................................................................................

*எனது அறிவுக்கெட்டிய வகையில் நான் வழங்கிய தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என்று உறுதிப்படுத்துகின்றேன். தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நான் வழிங்கிய தகவல்கள் பிழையானவை என்று தெரியவருமிடத்து நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவதோடு வேலைக்கமர்த்திய பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து எந்த நஷ்ட ஈடும் இன்றி வேலையிலிருந்து நீக்கப்படவும் ஆளாவேன் முடியும் என்பதையும் நன்கறிவேன்.*

............................................ ..........................................................

*திகதி* *விண்ணப்பதாரியின் கையொப்பம்*

*நிறுவனத் தலைவரின் பரிந்துரை (சேவையில் உள்ளவர்களுக்கு)*

*இந்த நிறுவனத்தில் திரு./திருமதி /செல்வி ............................. சேவை செய்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதோடு அவரின் சேவையை பரிந்துரை செய்கிறேன். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் விண்ணப்பம் முடிவுத் திகதி வரையான 5 வருட காலத்துக்குள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குள்ளாகவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.*

......................................... ..........................................................

*திகதி* *செயலாளர்,*
*பன்னல பிரதேச சபை.*

*06 - 142*

---

**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**

*ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கென இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 03 வருடங்களுக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|
| 01 | வாகன ஓட்டுநர் | 01 | (3/2016 பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைய) P.L.3/2016 ரூபா 25,790.00-10x270- 10x300-10x330-12x350- ரூபா 38,990.00 |

**திறந்த ஆட்சேர்ப்பு**

**ஆட்சேர்க்கும் தரம்** : *தரம்* III

**கல்வித் தகைமைகள் :**

*இரு தடவைக்கு மேற்படாது க.பொ.த (சா./த.) பரீட்சையில் குறைந்தது (02) இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் (05) ஐந்து பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

**தொழிற் தகைமைகள் :**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் நிகர எடை 34 அந்தருக்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்கள், ட்ரேர்கள் மற்றும் 32 பயணிகளுக்கு மேற்படாத தொகையினர் பயணிக்கும் பேரூந்து ஓட்டும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (ஆட்சேர்ப்புத் தினத்துக்குக் குறைந்தது 03 வருடங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட 'A' தரத்துக்கான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது புதிய அனுமதிப் பத்திரத்துக்கமைய 'B' வகுப்புச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்).

**அனுபவம் :**

மோட்டார் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் குறைந்தது 03 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**உடற் தகைமை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது :**

ஆகக் குறைந்த வயதெல்லை: 18 வருடங்கள்
உச்ச வயதெல்லை : 45 வருடங்கள்

**ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிடமிருந்து தொழிற் சோதனையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேவையான அனைத்துத் தகைமைகளையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடையே அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரது தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

உள்ளூராட்சி வாகன சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போட்டிப் பரீட்சை

01. பரீட்சை பற்றிய விபரங்கள் :

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01. வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 40% |
| 02. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 20% |

02. இந்தப் பரீட்சை உரிய பரீட்சை அதிகாரியினால் நடத்தப்படும்.

03. போட்டிப் பரீட்சைக்குத் தாம் கல்விகற்ற மொழி மூலத்தில் அல்லது அரசகரும மொழியொன்றில் இரண்டு வினாப் பத்திரங்களுக்கும் விடையெழுதுதல் வேண்டும்.

04. சித்தி பெறுவதற்கென ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) பெற்றிருத்தல் வேண்டும்.

05. **பரீட்சைக்கான பாடத்திட்டம்**:

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 01. வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு வினாப்பத்திரம் | வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு தொடர்பான பல்தேர்வு |
| 02. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு தொடர்பான பல்தேர்வு வினாப்பத்திரம் |

* மேற்குறித்த எழுத்துப் பரீடசையின் பெறுபேறுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரிடையே நிலவும் வெற்றிடங்களுக்கமையத் தொழிற்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

**தொழில்சார் தேர்வு** :

| *பரிசோதித்துப் புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *அதிகூடிய புள்ளி* | *சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு* |
|---|---|---|
| 01. வாகனம் ஓட்டும் தேர்ச்சி / இயந்திரத்தை இயக்கும் தேர்ச்சி | 40 | எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைத் தேர்வுக்குழுவினர் நடத்தும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடுவதற்கான தொழில்சார் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதிக்கப் பட்டோரிடையே தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். |
| 02. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய செயன்முறை அறிவு | 40 | |
| 03. மோட்டார் பொறிமுறை பற்றிய அடிப்படை அறிவு | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**ஏனையவை** :

1. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
2. விண்ணப்பதாரிகள் உரிய பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 03 வருடகாலத்துக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்;
3. சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல உடல்நிலையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;
4. பொருந்தெருக்கள் விதிகள் பற்றிய தெளிந்த அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்;
5. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டவாராக இருத்தல் கூடாது;
6. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவை கூட்டுத்தாபனச் சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லதுபொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது;
7. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரிகள் உரிய பதவிகளுக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வரையறுத்த ஆட்சேர்ப்பு** :

ஏற்கனவே உரிய உள்ளூராட்சி அமையத்தில் ஒரு பதவியில் நிரந்தாமாக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள பணியாட்களுக்குப் பொருந்தும்.

**ஆட்சேர்ப்புத் தரம்: தரம் III**

**கல்வித் தகைமைகள் :**

*இரு அமர்களுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

**தொழிற் தகைமைகள் :**

*மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் நிகர எடை 34 அந்தருக்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்கள், ட்ரேலர்கள் மற்றும் 32 பயணிகளுக்கு மேற்படாத தொகையினர் பயணிக்கும் பேரூந்து ஓட்டும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (ஆட்சேர்ப்புத் தினத்துக்குக் குறைந்தது 03 வருடங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட A தரத்துக்கான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது புதிய அனுமதிப்பத்திரத்துக்கமைய B வகுப்புச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்).*

**அனுபவம்:**

*சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபித்தல் வேண்டும்).*

**உடற் தகைமைகள் :**

*பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும். குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும்.*

**ஏனைய தகைமைகள் :**

1. *விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;*
2. *குறித்த உள்ளூராட்சி அமையத்தின் அதிகாரப் பிரதேசத்துக்குள் விண்ணப்பதாரி 03 வருடங்களுக்குக் குறையாத நிரந்நர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்;*
3. *வீதிப் போக்குவரத்துச் சட்டம், சமிக்ஞை பற்றிய சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும்;*
4. *ஆட்சேர்ப்புக்கான அனைத்து தகைமைகளையும் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று எல்லா வகையிலும் பெற்றிருத்தல் வேண்டும்.*

**வயது:**

*ஆகக் குறைந்த வயதெல்லை 18. ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டிருப்போருக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.*

**ஆட்சேர்ப்பு முறை:**

*உடல், உளப் பொருத்தப்பாடுகள் மற்றும் கல்வி, தொழில் தகைமை மற்றும் பொதுவான தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகத் தேர்வுடன் கட்டமைப்பான நேர்முகத் தேர்வின் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியைப் பெறுவோர் மோட்டார் வாகனப் பரிசோதகரால் நடத்தப்படும் செயன்முறைத் தேர்வில் தகுதி பெறுதல் வேண்டும்.*

**கட்டமைப்புத் தேர்வு :**

| பரிசோதித்துப் புள்ளி வழங்கப்படும் தலைப்பு | அதிகூடிய புள்ளி | சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01. வாகனம் ஓட்டும் தேர்ச்சி / இயந்திரத்தை இயக்கும் தேர்ச்சி | 40 | எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைத் தேர்வுக்குழுவினர் நடத்தும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடுவதற்கான தொழில்சார் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதிக்கப்பட்டோரிடையே தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். |
| 02. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய செயன்முறை அறிவு | 40 | |
| 03. மோட்டார் பொறிமுறை பற்றிய அடிப்படை அறிவு | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**சேவை நிபந்தனைகள் :**

1. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது;
2. விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்;
3. தெரிவுசெய்யப்படுபவர் மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவார்;
4. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது அரச திணைக்களங்கள் அல்லது ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக 12" x 8" அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2019 யுன் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை, தித்தபஜ்ஜல, வெரல்லகம" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்;
2. கல்விச் சான்றிதழ்கள்;
3. சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்;
4. தொழில் தேர்ச்சிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்;
5. ஏனைய தகைமைகளையும் அனுபவத்தையும் காட்டும் சான்றிதழ்கள்;
6. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரது சான்றிதழ். பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திக் கையொப்பமிட்டது;
7. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், தாமதப்படுத்தும் அல்லது இந்த விளம்பரத்தை இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

சீ.பீ. நவரத்ன,
செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை.

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை அலுவலகம்,
தித்தபஜ்ஜல,
வெரல்லகம.
2019, மே 22.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**

.................. பதவிக்கான விண்ணப்பப்படிவம்

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்: ..............................................................................................................

02. அஞ்சல் முகவரி: ..............................................................................................................................

03. பிறந்த திகதி: ............................ வருடம்: ................................ மாதம்: ............................... திகதி : .............................

04. விண்ணப்ப இறுதித் திகதியன்று உள்ளவாறு வயது: ..................................................................................
வருடங்கள் : .................................. மாதங்கள்: ............................. நாட்கள்: ..................................

05. (பால்) ஆண் /பெண் : ..........................................................................................

06. விவாகமானவர் /தனித்தவர்: ................................................................................................

07. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

08. வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திர வகை: ....................................................................................................

09. வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திர இலக்கம்: ...............................................................................................

10. வம்சாவளியினாலா பதிவினாலா இலங்கைப் பிரசை: ..................................................................................

11. ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம்: .............................................................

12. கல்வித் தகைமைகள்:
வருடம்: .......................

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

13. ஏனைய தகைமைகள்: ..............................................................................................................................................

14. சேவை அனுபவம்: ..............................................................................................................................................

15. ஏதும் குற்றங்களுக்கென எப்போதாயினும் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டணை பெற்றவராயின் அது பற்றிய விபரம்: ........................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

........................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :......................

06-233

**மத்திய மாகாண சபை**

**பன்வில பிரதேச சபை - பதவி வெற்றிடங்கள்**

மத்திய மாகாண அரசாங்க சேவையின் பன்வில பிரதேச சபையில் தற்போது பதவி வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கெனப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பன்வில பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.06.28 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பன்வில பிரதேச சபை, பன்வில" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பன்வில பிரதேச சபையில் (விண்ணப்பிக்கும் பதவி)க்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும். பன்வில பிரதேச சபையில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கும் பன்வில பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிப்போருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வாகன ஓட்டுநர் தரம் III | 02 |
| மருந்துக் கலவையாளர் தரம் III | 01 |

வாகன ஓட்நர் ஆட்சேர்ப்புக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்

01. **ஆட்சேர்ப்பு முறை** :

1.1 **ஆட்சேர்ப்பு வீதம்** :

| துறை | வீதம் |
|---|---|
| திறந்த | 70% |
| வரையறுத்த | 30% |

1.2 **திறந்த ஆட்சேர்ப்பு** :

1.2.1 ஆட்சேர்க்கும் தரம் : தரம் III

1.2.2 தகைமைகள்

1.2.2.1 **கல்வித் தகைமைகள்** :

இரு அமர்வுகளுக்கு மேற்படாது க.பொ.த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*1.2.2.2* **தொழிற் தகைமைகள்** :

மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒவ்வொரு பதவிக்குமெனப் பொருத்தமான வகுதிக்குரிய மோட்டார் வாகனத்தைச் செலுத்தும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். B1, B, C1, C, CE, D1,D, G1, G, J

*1.2.2.3* **அனுபவம்** :

சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபித்தல் வேண்டும்.)

*1.2.2.4* **உடற் தகைமைகள்**:

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் சிறந்த கண்பார்வையைக் கொண்டிருப்பதுடன் பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும்.

*1.2.3* **வயது** :

1.2.3.1 ஆகக் குறைந்த வயதெல்லை 18 வருடங்கள்

1.2.3.2 உச்ச வயதெல்லை 45 வருடங்கள்

*1.2.4* **ஆட்சேர்ப்பு முறை** :

எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிடமிருந்து தொழில்சார் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேவையான அனைத்துத் தகைமைகளையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடையே அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரது தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற் கொள்ளப்படும்.

1.2.4.1 எழுத்துப் பரீட்சை :

1.2.4.1.1 பரீட்சை பற்றிய விபரங்கள்

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01. வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 40% |
| 02. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 20% |

1.2.4.1.2 இந்தப் பரீட்சை உரிய பரீட்சை அதிகாரியினால் நடத்தப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தாம் கல்விகற்ற மொழி மூலத்தில் அல்லது அரசகரும மொழியொன்றில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையெழுதுதல் வேண்டும். சித்தி பெறுவதற்கென ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) பெற்றிருத்தல் வேண்டும்.

1.2.4.1.3 பரீட்சைக்கான பாடத்திட்டம்

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு தொடர்பான பல்தேர்வு வினாப்பத்திரம் |
| 02. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு தொடர்பான பல்தேர்வு வினாப்பத்திரம் |

*1.2.4.2* **தொழில்சார் தேர்வு :**

| *பரிசோதித்துப் புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *அதிகூடிய புள்ளி* | *சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு* |
|---|---|---|
| 01. வாகனம் ஓட்டும் தேர்ச்சி / இயந்திரத்தை இயக்கும் தேர்ச்சி | 40 | எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைத் தேர்வுக்குழுவினர் நடத்தும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடுவதற்கான தொழில்சார் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதிக்கப்பட்டோரிடையே தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். |
| 02. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய செயன்முறை அறிவு | 40 | |
| 03. மோட்டார் பொறிமுறை பற்றிய அடிப்படை அறிவு | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

*1.3* **வரையறுத்த ஆட்சேர்ப்பு :**

ஏற்கனவே உரிய உள்ளூராட்சி அமையத்தில் ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள பணியாட்களுக்குப் பொருந்தும்.

*1.3.1* ஆட்சேர்க்கும் தரம் : தரம் III

*1.3.2* தகைமைகள்

*1.3.2.1* **கல்வித் தகைமைகள் :**
இரு அமர்வுகளுக்கு மேற்படாது க.பொ.த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*1.3.2.2* **தொழிற் தகைமைகள் :**
மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒவ்வொரு பதவிக்குமெனப் பொருத்தமான வகுதிக்குரிய மோட்டார் வாகனத்தைச் செலுத்தும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். இதற்கு மேலதிகமாக இயந்திரங்களை இயக்கும் பதவிக்கென அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தேசிய தொழில் தகைமை 4 ஆவது மட்டம் (NVQ -4) பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

*1.3.2.3* **அனுபவம் :**
சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபித்தல் வேண்டும்.)

*1.3.2.4* **உடற் தகைமைகள்:**
(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையும் பெற்றிருத்தல் வேண்டும்.
(ii) குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும்.

*1.3.3* **வயது :**

*1.3.3.1* ஆகக் குறைந்த வயதெல்லை 18 வருடங்கள்

*1.3.3.2* உச்ச வயதெல்லை : உரிய உள்ளூராட்சி அமையத்தில் பணியில் உள்ளோர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது.

*1.3.4* **ஆட்சேர்ப்பு முறை :**
உடல், உளப் பொருத்தப்பாடுகள் மற்றும் கல்வி, தொழில் தகைமை மற்றும் பொதுவான தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகத் தேர்வுடன் கட்டமைப்பான நேர்முகத் தேர்வின் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியைப் பெறுவோர் மோட்டார் வாகனப் பரிசோதகரால் நடத்தப்படும் செயன்முறைத் தேர்வில் தகுதி பெறுதல் வேண்டும்.

*1.3.4.1* **கட்டமைப்புத் தேர்வு :**

*1.3.4.1.2* **புள்ளி வழங்கப்படும் முறை :**

| பரிசோதித்துப் புள்ளி வழங்கப்படும் தலைப்பு | அதிகூடிய புள்ளி | சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01. வாகனம் ஓட்டும் தேர்ச்சி / இயந்திரத்தை இயக்கும் தேர்ச்சி | 40 | எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைத் தேர்வுக்குழுவினர் நடத்தும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடுவதற்கான தொழில்சார் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதிக்கப்பட்டோரிடையே தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். |
| 02. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய செயன்முறை அறிவு | 40 | |
| 03. மோட்டார் பொறிமுறை பற்றிய அடிப்படை அறிவு | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

*1.3* **சம்பள அளவுத் திட்டம் :**
(PL-3/ 2016 பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய) PL-3-2016 ரூபா 25,790.00-10X270-10X300-10X330-12X350 ரூபா 38,990.00 (எனினும் சம்பளம் வழங்கப்படும் போது பொது நிருவாகச் சற்றறிக்கை 03-2016 இன் அட்டவணை II இல் உள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்).

*1.3* **ஏனைய தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரிகள் பரம்பரையாக அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) குறித்த உள்ளூராட்சி அமையத்தின் அதிகாரப் பிரதேசத்துக்குள் விண்ணப்பதாரி 03 வருடங்களுக்கு குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(iii) வீதிப்போக்குவரத்துச் சட்டம் பற்றிய சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.
(iv) ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளையும் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று எல்லா வகையிலும் பெற்றிருத்தல் வேண்டும்.

*02.* **மருந்துக் கலவையாளர் பதவிக்கான தகைமைகள்**

*2.1* **வெற்றிட எண்ணிக்கை :** 01

*2.2* **சம்பள அளவுத் திட்டம் :** PL-2- 2016
இந்தப் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டம் மாதாந்தம் பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இற்கமைய ரூபா 25,250.00-10X270-10X300-10X330-12X350 ரூபா 38,450.00 ஆகும். எனினும் சம்பளம் வழங்கப்படும்போது பொது நிருவாகச் சற்றறிக்கை 03/2016 இன் அட்டவணைப்படி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களுக்கான சம்பளம் வழங்கப்படும். தரம் III இற்கான சம்பள அளவுத்திட்டத்தின் நான்காவதுபடிக்கு வருவதற்கு முன்னர் தகவுத்திறன் தடை தாண்டலில் சித்தியடைதல் வேண்டும்.

*2.3* **கல்வித் தகைமைகள் :**
இரு தடவைக்கு மேற்படாது க.பொ.த (சா.த.) அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் (சா.த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

*2.3.1* தொழிற் தேர்ச்சிகளும்/திறமைகளும் :
நியமன அதிகாரி எதிர்பார்க்கும் பதவிக்குரிய தொழில்நுட்பத் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
(அ) தேசிய தொழில்சார் தகைமையின் தொழில் தொடர்பான 2 ஆம் மட்டம் (NVQ -2) அல்லது 3 ஆவது மட்டச் சான்றிதழ் (NVQ -3) பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) தேசிய தொழிற் பயிற்சித் திணைக்களத்தின (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(இ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

(ஈ) இலங்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையின் (VTA) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்கு குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

(உ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

(ஊ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.

2.3.2 *அனுபவம் :*

உரிய துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (பயிற்சிக் காலம் குறைந்து 02 வருடங்களேனும் இருத்தல் வேண்டும்.

2.3.3 *ஏனைய தகைமைகள் :*

நியமன அதிகாரி எதிர்பார்க்கும் பதவிக்குரிய தொழில்நுட்பத் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.3.4 *வயது :*

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் தியதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஊழியராக இருப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை பொருந்தாது.)

2.3.5 *ஆட்சேர்ப்பு முறை :*

மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் பெயரிடப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்படும் நேர்முகத் தேர்வின் பெறுபேறின்படி குறித்த உள்ளூராட்சி அமையத்தின் நியமன அதிகாரியினால் பதவிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

03. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான பொதுவான நிபந்தனைகள் :**

- இந்த பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது, ஓய்வூதிய முறைமை பற்றி அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும். மேலும், விதவைகள் அநாதைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். இது தொடர்பில் அரசு இடைக்கிடை விதிக்கும் நியமங்களுக்கமையவும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- அரசாங்க சேவை நியமனங்களுக்கான பொது நிபந்தனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.
- அரசகரும மொழி கொள்கையைச் செயற்படுத்துவதற்கெனவும் குறிப்பாக அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கெனவும் இற்றைவரை ஆக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஆக்கப்படவுள்ள ஏற்பாடுகளுக்கமையச் செயற்படுதல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படுபவர் நியமனத் தினத்திலிருந்து 03 வருடகால தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவதுடன், தகுதிகாண் கால எல்லைக்குள் சேவை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமாக இல்லையெனின் பதவி நீக்கப்படுவர்.
- வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கௌ்ளும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்கள் உரிய பதவிகளுக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

05. **ஏனைய பொதுவான நிபந்தனைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் உரிய பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் 03 வருட காலத்துக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது உள்ளூராட்சி அரசாங்க சேவையில் ஏற்கனவே பணியாற்றுவோர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது.)
- விண்ணப்பதாரிகள் வம்சாவளியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை உடையவராகவும் நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் அரசாங்க மருத்துவர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் மருத்தவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையில் உடற்தகைமை தகுதியற்றதாகக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.
- இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றில் மூலம் குற்றவாளிகாக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டவாராக இருத்தல் கூடாது.
- விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் 03 வருடத்துக்குக் குறையாத நிரந்தர வதிவுக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (வாக்காளர் பதிவேடு அல்லது பிரதேச செயலாளர் வழங்கிய சான்றிதழால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)வெற்றிடங்களை நிரப்புவதற்கென முதலில் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிப்போரிடையே தகுதியானோர் தெரிவு செய்யப்படுவதுடன் எமது உள்ளூராட்சி அமையப் பிரதேசத்துக்குள் வெற்றிட எண்ணிக்கைக்குப் போதுமான அளவு விண்ணப்பிக்காத பட்சத்தில் அடுத்துள்ள உள்ளூராட்சி அமையத்தின் எல்லைக்குள் வசிப்போரது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
- அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவை, கூட்டுத்தாபனச் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது.
- அரசாங்க அல்லது உள்ளூராட்சிச் சேவையில் ஈடுபட்டுள்ளோர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அதற்கு முன்னரான 03 வருட காலத்துக்குள் (எச்சரிக்கை தவிர்ந்த) குற்றமொன்றுக்கான தண்டனை பெறாதவராகவும், அக்காலத்துக்குள் சம்பள உயர்ச்சிகள் குறித்த காலத்தில் ஈட்டப்பட்டவராகவும், திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படாவிட்டாலும் அவர்கள் விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குத் தொடர்ந்து பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- ஏனைய சட்டவிதிகள் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பதாரி முப்படைகள் அல்லது பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டு, முறையாகச் சேவையிலிருந்து விடுவிக்கப்படாதவராக இருத்தல் கூடாது.
- ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைத் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதிப் பிரமாணங்கள், அரச திணைக்களங்களது கட்டளைகள், மத்திய மாகாண சபை அல்லது பன்வில பிரதேச சபை காலத்துக்குக் காலம் விடுக்கும் கட்டளைகள், சட்டங்கள் நியமங்களுக்கு அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.
- எந்தப் பதவிக்கேனும் மதகுருமார் விண்ணப்பதாரராக இருக்க முடியாது.
- இந்த ஆட்சேர்ப்பு அறிவிப்பின் ஏற்பாடுகள் வழங்கப்படாத எந்தவித அம்சம் தொடர்பிலும் பன்வில பிரதேச சபையின் செயலாளரது முடிவே இறுதித் தீர்வாக அமையும்.

05. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பத்துக்கமைய அதனைப் பிழையின்றி பூரணப்படுத்தி விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைத்து 2019.06.28 ஆந் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தொழிற் தகைமையைக் காட்டும் சான்றிதழ்கள்;
3. தமது வதிவிடச் சான்றிதழ் கிராம அலுவலகர் வழங்கியது. (பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியது);
4. அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்.

வாசனா குமாரி விஜேசேன,
செயலாளர்,
பன்வில பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பன்வில
2019, மே 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பன்வில பிரதேச சபை**

மத்திய மாகாண அரசாங்க சேவையின் ................................................... பதவி

01. 1. 1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..............................................................

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள்: .......................................................................

02. நிரந்தர முகவரி : ..................................................................................

03. நிரந்தர வதிவிட மாவட்டம் : ........................................................................................

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. பிறந்த திகதி : ..................... ஆண்டு : .................. மாதம்: ..................... திகதி: .....................

06. விண்ணப்பம் முடிவுத் திகயிலுள்ளவாறான வயது: வருடங்கள் : ......... மாதங்கள் : ............... நாட்கள்: ............

07. பால் : (ஆண்/பெண்) : ..........................................................................................................

08. குடியியல் நிலை : (விவாகமானவர்/விவாகமாகாதவர் : .........................................................................................

09. நீங்கள் இலங்கைப் பிரசையாவது : (வம்சாவளியினாலா/பதிவினாலா) ..................................................

10. கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
க.பொ.த. (சா.த.) பரீட்சை :

முதலாவது தடவை : ......................................
சித்தியடைந்த வருடம் : ......................................
சுட்டிலக்கம் : ................................................

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

இரண்டாவது தடவை : ......................................
சித்தியடைந்த வருடம் : ......................................
சுட்டிலக்கம் : ................................................

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

11. (1) ஏனைய கல்வித் தகைமைகள் : ........................................................................
(2) தொழிற்தகைமைகள் : ..........................................................................
(3) சேவை அனுபவம் :........................................................................

12. ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவரெனின் வகிக்கும் பதவி :
நிரந்தரம்/சமயோசிதம்/தற்காலிகம்/ஒப்பந்தம்/பதிலீடு :.........................................................................
அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ..........................................................................

13. ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ?
அவ்வாறாயின், விபரம் தருக : ...........................................................................................

............................................................

திகதி : ........................................ விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*14.* **அரசாங்க சேவையிலுள்ளோருக்கான திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

திரு./திருமதி/செல்வி ..................................... இந்த நிறுவனத்தில் ................................................. ஆக பணியாற்றுகிறார். இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலான தண்டத்துக்கும் உட்படவில்லை என்பதையம் உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தைப் பரிந்துரை செய்கின்றேன்.

.................................................
திணைக்களத் தலைவரது கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :................................

06-175

---

**பத்தேகம பிரதேச சபை**

**தென் மாகாண அரசாங்க சேவை பதவி வெற்றிடம்**

பத்தேகம பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்கு உரிய தகுதிகளை பூர்த்தி செய்திருக்கும் காலி மாவட்டத்தினுள் நிரந்தர பதிவாளரான ஆண்/பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவியின் பெயர் | சேவை | வெற்றிடங் களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பள அளவுத்திட்டம் | குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஆயுர்வேத மருந்து கலவையாளர் III தரம் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெற்ற III தரம் | 02 | PL 2 - 2016 | ரூபா 25,250.00 - 10X270-10X300 - 10X330-12X350 - ரூபா 38,450.00 | (i) க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>(ii) தொழில் முறைக் கல்வி ஆணைக் குழுவால் தீர்ப்பு செய்த படி தேசிய தொழில் திறமையில் (NVQ) குறைந்த பட்சம் மூன்றாம் மட்ட திறன் பெற்றிருத்தல்<br>(iii) தொடர்புடைய துறையில் அனுபவம் மேலதிக தகுதியாகக் கருதப்படும். |
| 02 | காவலர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 02 | PL 1 - 2016 | ரூபா 24,250.00- 10X250 -10X 270 - 10X300 -12X330 - ரூபா 36,410.00 | (i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| 03 | நூலக உதவியாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 02 | PL 1 - 2016 | ரூபா 24,250.00 - 10X 250 -10X 270 -10X300- 12X330 - ரூபா 36,410.00 | (i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |

| தொ. இல. | பதவியின் பெயர் | சேவை | வெற்றிடங் களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பள அளவுத்திட்டம் | குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|---|---|
| 04 | வேலை/ கள தொழிலாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 02 | PL 1 - 2016 | ரூபா 24,250.00- 10x250 -10x 270 - 10x300 -12x330 - ரூபா 36,410.00 | 08 ஆம் வகுப்பு (09 ஆண்டு) சித்தியடைந்திருத்தல். |
| 05 | சுகாதார தொழிலாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 01 | PL 1 - 2016 | ரூபா 24,250.00- 10x250 -10x 270 - 10x300 -12x330 - ரூபா 36,410.00 | 08 ஆம் வகுப்பு (09 ஆண்டு) சித்தியடைந்திருத்தல். |
| 06 | கன உபகரண இயந்திர இயக்குனர் (ஒப்பந்த படி) | ஆரம்ப மட்டம் தேர்ச்சி III தரம் | 01 | PL 3 - 2016 | ரூபா 25,790.00 - 10x270-10x300 - 10x330-12x350 - ரூபா 38,990.00 | (i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>(ii) கன உபகரண இயந்திர இயக்குவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் ஜெனரலால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களுக்கு அது சம்பந்தமான வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரம் திறமையில் (NVQ-04) திறன் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(iii) சாரதி அனுமதிப் பத்திரம் கிடைத்த பின் குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் அனுபவம் |

**02. வயது எல்லை :-**

(i) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

(ii) தற்போது அரசாங்க சேவையில் நிரந்தர சேவையில் கடமை புரியும் விண்ணப்பதாரருக்கு உச்ச வயதெல்லை பற்றி கருத்திற் கொள்ளப்பட மாட்டாது

**03. பொது தகுதிகள் :-**

(i) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்; விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்கு முன் 03 வருடகாலத்திற்குள் தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் (பத்தேகம அதிகார எல்லையில் வதிவாளருக்கு விசேட கவனம் செலுத்தப்படும்).

(ii) விண்ணப்பதாரர் நன்னடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பதாரர் தண்டனை குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது. அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;

(iv) விண்ணப்பதாரர்கள் உரிய பதவிக்கு முன் குறிப்பிட்டு இருக்கும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(v) தற்போது பத்தேகம பிரதேச சபையில் மேற் குறிப்பிட்ட பதவிகளில் அமைய, தற்காலிக, ஒப்பந்த அல்லது நாட் சம்பளத்தில் சேவையில் இருப்பவர்களுக்கு அதிக கவனம் செலுத்தப்படும் என்றும், அவர்கள் தாபன அதிகாரி மூலம் தனது விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்;

(vi) விண்ணப்பப்பத்திரம் கோரப்படும் அறிவிப்பில் குறிப்பிடப்படும் திகதிக்கு அந்த தகுதி எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(vii) பத்தேகம பிரதேச சபையின் பிரதேசத்திக்குள் இருக்கும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ற சாதாரண தகுதியுடையவர்களை தேர்ந் தெடுப்பதற்கு முடியாவிடத்து மாத்திரம் அண்மையிலுள்ள உள்ளூராட்சி தாபனங்களில் பிரதேசத்தில் வதிபவர்களிலிருந்து தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**04. பொது நிபந்தனை :-**

(i) விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்டதன் பின் அல்லது கால எல்லைக்கிடையில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு தாமதிப்பதற்கு அல்லது இந்த அறிவிப்பை இரத்து செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு பத்தேகம பிரதேச சபையின் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 மாதத்திற்குள் அரச வைத்திய பரிசோதனைக்கு உட்பட்டிருப்பதுடன் அந்த பரிசோதனையின் உடல் நல சம்பந்தமாக தகுதியற்றவராக காணப்படின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும்.

**05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

- **கன வாகனம் இயந்திர இயக்குனர் பதவி இன்றி மற்றைய பதவிகளுக்காக**

(i) இந்துப் பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக எதிர்காலத்தில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் கொள்கைகளுக்கு, தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

(ii) விதவைகள் /அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 ஆண்டுக்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். அந்தக் காலத்திக்குள் வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமாக இருக்கும் ஆயின் மாத்திரம் தகுதிகாண் காலம் முடிவில் சேவையை நிரந்தரம் செய்ய முடியும்.

(iv) அரசகரும மொழிக் கொள்கைப்படி தேவையான தேர்ச்சி பெற்றிருதல் வேண்டும்.

(v) குற்றவியல் குற்றம் தொடர்பாக இது வரை சட்ட நீதிமன்றத்தில் குற்றவாளியாக இருத்தல் கூடாது.

(vi) ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன ஒழுங்கு விதிகளுக்கு கூடுதலாக இலங்கைக் குடியரசின் தாபன ஒழுங்கு விதிகளுக்கும் மற்றும் அரசாங்க திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், தென் மாகாண சபை, தென் மாகாண அரசாங்க ஆணைக்குழு அவ்வப்போது திணிக்கப்படும் கட்டளைகளுக்கும் முரண்பாடற்றவாறு செயற்படுவதற்கு சகல சேவையாளரும் உட்பட்டவர்களாவார்.

- **கன வாகனம் இயந்திர இயக்குனர் பதவிக்காக சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

(i) மேற் தொடர் இலக்கம் v, vi இன் கீழ் காட்டப்பட்டுள்ள சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை.

(ii) அரசாங்க சேவை பொது சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிக்க வேண்டும்.

**06. ஆட்சேர்க்கும் முறை:**

(i) குறிப்பிட்ட தகைமை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பதாரர் முறையான நேர்முகப் பரீட்சை மற்றும் தொழிற் திறமையை உறுதிசெய்யும் பரீட்சைக்கு அனுப்புவதுடன் அந்த பெறுபேற்றின் படி ஆட்சேர்க்கப்படும்.

**07. நேர்முகப் பரீட்சைக்கு புள்ளி வழுங்கும் முறை :-**

ஆரம்ப தொழில்நுட்பம் சார்ந்த அரை தேர்ச்சி பெற்ற சேவைப் பிரிவு

| புள்ளிகள் வழுங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்சப் புள்ளிகள் |
|---|---|
| 1 கல்வித் தகைமை | 30 |
| 2 தொழில் முறைத் தகுதிகள் | 10 |
| 3 பதவிக்குரிய பெற்றுக் கொண்ட அனுபவம் | 20 |
| 4 பிரதேச சபை பகுதியில் வசிக்கும் (ஒவ்வொரு ஆண்டுக்கும் புள்ளி 5 படி) | 35 |
| 5 நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

**ஆரம்ப தொழில்நுட்பம் அல்லாத உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் ஆட்சேர்புக்கான நேர்முகப் பரீட்சை**

| | புள்ளிகள் கொடுக்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 1 | கல்வித் தகைமை | 30 |
| 2 | மேலதிக தகுதிகள் | 20 |
| 3 | பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் காலம் (ஒவ்வொரு ஆண்டுக்கும் புள்ளி 5 படி) | 35 |
| 4 | நேர்முகப் பரீட்சையில் காட்டுக் திறமை | 15 |
| | மொத்தம் | 100 |

**08. விண்ணப்பப்பத்திரம் விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

விண்ணப்பதாரர் இதில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் படி (A4) அளவுடைய கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை 2019.06.21 ஆந் திகதி அல்லது அத் திகதிக்கு முன் தலைவர், பத்தேகம பிரதேச சபை, பத்தேகம. என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரம் மற்றும் முழுமையற்ற விண்ணப்பப்பத்திரம் ஏதும் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

தற்போது அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர் தமது தாபனத் தலைவர் மூலம் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்ட தன் பின் அல்லது கால எல்லைக்கிடையில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு தாமதிப்பதற்கு அல்லது இந்த அறிவிப்பை ரத்து செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு பத்தேகம பிரதேச சபையின் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

விண்ணப்பப்பத்திர படிவத்தோடு பின்வரும் சான்றிதழ்கள் நிழல் பிரதியை இணைக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையில் அசல் நகல் மற்றும் அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும்.

- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
- தேசிய ஆளடையாள அட்டை
- கல்விச் சான்றிதழ் உயர் கல்வித் தகைமை காட்டும் வேறு சான்றிதழ்
- பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (உரிய பிரதேச செயலாளர் கையொப்பமிடப்பட்ட 06 மாதத்திக்குள் பெற்றுக் கொண்ட கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ்)
- சமீபத்தில் பெற்றுக் கொண்ட நன்நடத்தை சான்றிதழ் இரண்டு
- தொழில் அல்லது சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்
- வேறு தகுதி தொடர்பான சான்றிதழ்
- (ஆரம்ப தகுதியை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர் மாத்திரம் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்)

அனுர அமரசிறி நாரங்கொட,
தலைவர்,
பத்தேகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பத்தேகம,
2019, மே 22.

மாதிரி விண்ணப்ப படிவம்

**பத்தேகம பிரதேச சபை**

........................................................ பதவிக்காக

01. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் முதலெழுத்துக்களுடன் :..........................................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் : ..............................................................................................................

03. நிரந்தர விலாசம் : ......................................................................................................................................

04. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு : ....................................... கிராம அலுவலர் பிரிவு : ............................................

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

06. பிறந்த திகதி : ஆண்டு: ............................. மாதம் : ................................. திகதி : ......................................

07. விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள்: ............................. மாதங்கள் : .................................. நாட்கள் : ......................................

08. திருமணம் ஆனவர் /திருமணம் ஆகாதவர் : ..........................................................................

09. பால் (ஆண் /பெண்) : ........................................................................................................................

10. இனம் : .........................................................................................................................

11. நீர் இலங்கைப் பிரசையா ?(பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமா என்று குறிப்பிடுக) : ...........................................

12. நீர் ஏதாவது குற்றத்திற்காக நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? : ......................................

13. தொலைபேசி இலக்கம் –:...............................................................................

14. கல்வித் தகைமை : ...............................................................................

க. பொ. த. (சா. த.)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

க. பொ. த. (உ. த.)

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

15. தொழிற் தகைமை மற்றும் அனுபவம் : ..................................................................................................................

16. நீர் தற்போது பத்தேகம பிரதேச சபையின் அல்லது தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின் :

(i) தற்போது வகிக்கும் பதவி : ..................................................................................................
(ii) அந்தப் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ...................................................................................................
(iii) அந்தப் பதவியின் தன்மை : ( நிரந்தரம் / தற்காலிக / அமைய / ஒப்பந்த / நாட் சம்பளத்திற்கு) ........................................
(iv) நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? .............

இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றவையும் என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் பிழையானவை அல்லது உண்மையற்றவை என நான் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு முன் தெரியவந்தால் நான் தகமையற்றவன் ஆவேன் என்பதையும் பதவி கிடைத்த பிறகு அவ்வாறான விடயமொன்று தெரிய வந்தால் எதுவித இழப்பீடும் இல்லாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :.................................................. ..............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவன தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ................................................. தற்போது இத்திணைக்களத்தில் / நிறுவகத்தில் ................................................. பணிபுரிகின்றார். அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கு (அறிவுறுத்தலைத் தவிர) உட்பட வில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப் படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

...................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் : ..........................................
பதவி : ..........................................
திகதி : ............................................

06 - 174

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கரைச்சி பிரதேச சபை**

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2019

2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற கரைச்சி பிரதேச சபையின் விசேட சபையமர்வின் தீர்மான இலக்கம் 2018.11.28 (I)) இன் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளது. என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அருணாசலம் வேழமாலிகிதன்
தவிசாளர்
கரைச்சி பிரதேச சபை

கரைச்சி பிரதேச சபை அலுவலகம்,
கிளிநொச்சி,
2018, நவெம்பர் 28

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆவது பிரிவின்(1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி கரைச்சி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் விருத்தியடைந்த பகுதிகளாகப்

பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு அசையாத சொத்தின் மீதும் 2019 ஆம் ஆண்டுக்கென மதிப்பீட்டு வரி விதிப்பது தொடர்பாக 2018.11.28 ஆந் திகதி, தீர்மான இலக்கம் 2018.11.28 (i) இன் கீழ் விதிக்கப்பட்ட மதிப்பீட்டு வரி முன்மொழிவுகளைப் பின்வரும் வகையில் செயற்படுத்துவது பொருத்தமென கரைச்சி பிரதேச சபையின் விசேட சபை முன்மொழிகின்றது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (1)ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி கரைச்சி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) ஆவது உப பிரிவின் கீழ் விருத்தியடைந்த பகுதிகளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு அசையாத சொத்தின் மீதும் 2019ஆம் ஆண்டு புதிய மதிப்பீட்டின் படி பெறப்பட்ட வருடாந்தப் பெறுமதியை அவ் ஆண்டின் மதிப்பீட்டு வரி விதிப்புக்கான பெறுமதியாக ஏற்றுக் கொள்வதற்கும் புதிய கணிப்பீட்டின் மீது மதிப்பீட்டு வரி விதிப்பை 2019.01.01 ஆம் திகதி செயற்படுத்துவதற்கும்;

(இ) 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி கரைச்சி பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் விருத்தியடைந்த பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள அசையாச் சொத்து ஒவ்வொன்றின் மீதும் அதன் ஆண்டுப் பெறுமதியின் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வீதிகளிலும் தெருக் களிலும் அமைந்துள்ள சொத்துக்களின் மீது முறையே 10% என 2019 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டு வரியை விதித்து அறவிடுவதற்கும்.

(ஈ) 134 ஆவது பிரிவின் (6) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி குறித்த மதிப்பீட்டு வரியை 2019 செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் 2 காலாண்டுகளுக்குள் சமமான 2 தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தல் வேண்டுமென விதிப்பதற்கும் கரைச்சி பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

**கரைச்சி பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் விருத்தியடைந்த பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகள்**

| வட்டார இல. | வட்டாரத்தின் பெயர் | கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் |
|---|---|---|
| 21 | கனகாம்பிகைக்குளம் | தொண்டமான்நகர் KN/17<br>கனகாம்பிகைக்குளம் KN/18<br>அம்பாள்நகர் KN/19 |
| 09 | திருவையாறு | திருவையாறுKN/20<br>திருவையாறு மேற்குKN/21<br>மருதநகர்KN/24 |
| 10 | கிளிநொச்சி நகரம் | இரத்தினபுரம்KN/22<br>கிளிநொச்சி நகரம்KN/23<br>ஆனந்தபுரம்KN/16 |
| 11 | கணேசபுரம் | திருநகர் தெற்குKN/27<br>திருநகர் வடக்குKN/28<br>கணேசபுரம்KN/29<br>ஜெயந்திநகர்KN/30 |
| 13 | உதயநகர் | விவேகானந்தநகர்KN/10<br>உதயநகர் கிழக்குKN/12<br>உதயநகர் மேற்குKN/13<br>கனகபுரம்KN/26 |
| 19 | கிருஸ்ணபுரம் | கிருஸ்ணபுரம்KN/11<br>அம்பாள்குளம்KN/14<br>செல்வாநகர்KN/15 |
| 20 | பாரதிபுரம் | பொன்னகர்KN/07<br>பாரதிபுரம்KN/08<br>மலையாளபுரம்KN/09 |

06-153

**வடமாகாண, மாகாண சபை**

*வடமாகாண பிரதேச சபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகளை ஏற்றுக்கொள்ளல்*
*1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் நியமத் துணைவிதிகள் சட்டம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் ( இடைநேர் விளைவான ஏற்பாடுகள் ) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவில் மாகாணசபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வடமாகாண உள்ளூராட்சிஅமைச்சரால் 2018.05.09 ஆந் திகதிய 2070/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை ( அதிவிசேஷமானது ) மூலம் பிரசுரிக்கப் பட்டுள்ள வடமாகாண பிரதேசசபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நியமத்துணை விதிகள் அத்தியாயம் 7 முதல் 9 வரை வவுனியா மாவட்டத்துக்குள் அமையப் பெற்றுள்ள வவுனியா வடக்கு பிரதேசசபையின் அதிகாரப் பிரதேசத்துக்குள் 2019.02.01 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்துவதென வவுனியா வடக்கு பிரதேசசபையின் 2019.01.17 ஆந் திகதிய VNPS/2019/GM/01/10/05 சபைக்கூட்டத் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 123(2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகிறேன்.*

ச. தணிகாசலம்
தவிசாளர்

வவுனியா வடக்கு பிரதேச சபை
நெடுங்கேணி

*06-99*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2019***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.05.2019 |
| | | வெள்ளி | 14.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2019 |
| | | வெள்ளி | 21.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2019 |
| | | வெள்ளி | 28.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2019 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2019 |
| | | வெள்ளி | 12.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2019 |
| | | வெள்ளி | 19.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2019 |
| | | வெள்ளி | 26.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2019 |
| **ஒகத்து** | .. | வெள்ளி | 02.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2019 |
| | | வெள்ளி | 09.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2019 |
| | | வெள்ளி | 16.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2019 |
| | | வெள்ளி | 23.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2019 |
| | | வெள்ளி | 30.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2019 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*